


# திருகோணமலையை பிறப்பிடமாகவும்
## வசிப்பிடமாகவும் கொண்ட
# அமரர்.சிங்கராஜா முருகையா
## முன்னாள் முகாமைத்துவ உதவியாளர்
## [இலங்கை துறைமுக அதிகார சபை]
# அவர்களின் இறைபதப்பேறு குறித்த நினைவுமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07.01.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பும் பண்பும் கொண்டே
ஆற்றலொடு குடும்பம் காத்த
எங்கள் குடும்ப தலைவர்
எம்மை விட்டு அகன்றாலும்
எங்கள் உள்ளங்களில் இருந்து
அணையாத விளக்காய்
என்றும் சுடர் விடவே
எங்கள் உணர்வினை ஏடாக்கி
அளிக்கின்றோம் சமர்ப்பணமாய்...

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





19 • 01 • 1946

தோற்றம்

08 • 12 • 2023

மறைவு

# அமரர் சிங்கராஜா முருகையா

## அவர்கள்

ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர்

(இலங்கை துறைமுக அதிகார சபை)

### திதி நிர்ணயம்

ஆண்டு சோபகிருது ஆனமாதம் மார்கழியில்

ஆண்ட அபரபக்க ஏகாதசியில் - மண்விட்டு

சென்ற முருகையா என்னும் உத்தமரும்

நின்ற இறையடி நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## ஞாயிற்று கிழமைகளில் பாடப்படவேண்டிய தோத்திரப் பாடல்கள்.

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம் பிறைபோலு மெயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்பமேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோஅருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு விடங்கன்
விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகி பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாநிற்குந் தில்லைப்பொது நடம்போற்றி போற்றி.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திங்கட்கிழமைகளில் பாடப்படவேண்டிய தோத்திரப் பாடல்கள்.

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக்கனியே
அம்பலம் ஆட ரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும்திருவும் பொலியச் சிவலோகநாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாதஅறிவுபெற்றேன்பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங்கழற வுளறி உமைமணவாளனுக்காள்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்குஞ்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## திருப்புகழ்

பாதிமதிநதி போது மணிசடை
நாதனருளிய குமரேசா
பாகுகனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காதுமொருவிழி காகமுறவருள்
மாயனரி திரு மருகோனே
காலனெனை யணு காமலுன திரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதியயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுமயிலினில் ஏறிய மரர்கள்
சூழ வலம் வரும் இளையோனே
சூதமிகு வளர்சோலை மருவு
சுவாமி மலைதனில் உறைவோனே
சூரனுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வாய்க்கிழமைகளில் பாடப்படவேண்டிய தோத்திரப் பாடல்கள்.

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக்கொருவனாய் நின்றாய் நீயே
வாசமலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப்பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய்நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதீ.

### திருவாசகம்

மெய்தானரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான்தலைவைத்துக்கண்ணீர்ததும்பிவெதும்பிஉள்ளம்
பொய்தான்தவிர்ந்துன்னைப்போற்றிசயசயபோற்றிஎன்னும்
கைதான்நெகிழவிடேனுடையாயென்னைக்கண்டுகொள்ளே

### திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனைய தோர்
படரொளி தருதிரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியுங் கொன்றையும்
குன்று பொறகுழல் திருச்சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல் மெழு கொக்கின்றதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈர்ந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமைவேண்டும்மீண்டும்பிறப்புண்டேல்உன்னைஎன்றும்
மறவாமைவேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்துபாடி
அறவாநீஆடும்போதுஉன்அடியின் கீழ் இருக்க என்றார்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதன்கிழமைகளில் பாடப்படவேண்டிய தோத்திரப் பாடல்கள்.

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கிலுமுன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண்டு ழல்வாய்
உடலுள் ளுறுசூலை தவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

### திருவாசகம்

ஆடுகின்றிலை கூத்துடையான்கழற் கன்பிலை என்புருகி
பாடுகின்றிலைபதைப்பதும்செய்கிலைபணிகிலைபாதமலர்
சூடுகின்றிலைசூட்டுகின்றதுமிலைதுணையிலிபிணநெஞ்சே
தேடுகின்றிலைதெருவுதோறலறிலைசெய்வதொன்றறியேனே

### திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக்கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினி லோங்கிய ஞானம்
உவமையிலாக்கலைஞானம்உணர்வரியமெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.

## திருப்புகழ்

திருமகளுலாவு மிரு புயமுராரி
திருமுருக நாமப் பெருமாள்காண்
ஜெகதலமும் வானுமிகுதி பெறுபாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவும் அடியார்கள் மனதில் விளையாடு
மரகத மயூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசியணியரு விசூழ
மருவு கதிர்காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறுபட அசுரர்மாள
அமர் பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவு சடைவேணி
அருள்செய் குருநாதப் பெருமாள்காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினையிலாத தருவினை விடாத
இமையவர் குலேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதன விநோதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழக்கிழமைகளில் பாடப்படவேண்டிய தோத்திரப் பாடல்கள்.

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

பேராயிரம் பரவி வானோரேத்தும்
பெம்மானை பிரிவிலா அடியார்க்கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி
தீராதநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலை கைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.

### திருவாசகம்

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை ஆண்டாய்க்
குள்ளந்தான் நின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையினேற்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில் தில்லை
தென்னன் தமிழும் இசையுங் கலந்த
சிற்றம்பலம் தன்னுள்
பொன்னும் மணியுந் நிறைந்த தலத்து
புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
விகிர்தன் ஆடுமே.

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய்
உன்தன் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே
எனக்கு வாலிதாமின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர்
சொரியக் கைமலருச்சிமேற் குவித்து
பண்ணினா னீடியறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள் நினைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருகசெம்பொற் கழலோனே
கருணை நெறிபுரியமன்பர்க் கெளியோனே
கனகசபை மருவுகந்தப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளிக்கிழமைகளில் பாடப்படவேண்டிய தோத்திரப் பாடல்கள்.

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

ஊனாகி உயிராகி யதனுள் நின்ற
உணர்வாகி பிறவனைத்தும் நீயாய்நின்றாய்
நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்ல கண்டங் கொண்டடியேன் என்செய்கேனே.

### திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள் புரியாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன்தேட
அங்ஙனனே பெரியநீ சிறிய
என்னை யாள்விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்ட சோழேச் சரத்தானே.

## திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்டோல
மிட்டு இன்னம் புகலரிதாய்
இரந் திரந்தழைப்ப என்னுயிராண்ட
கோவினுக்கென் செயவல்ல மென்றும்
கரந்துங் கரவாத கற்பகனாகி
கரையில் கருணைக் கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடையபுண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவள மலர் திபூத்த விதைக் கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என்ற திசயித்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியிலு றைபவர்
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ மலர் கொடு பணிவேனே
முத்த மிடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரது கொடு சுப்பிரமணி படும்
அப்புனமத னிடை இபமாகி
அக்குறமகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனிக்கிழமைகளில் பாடப்படவேண்டிய தோத்திரப் பாடல்கள்.

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளும் துன்பமில்லை
தமார்க்கும் குடியதல்லாத் தன்மையான
சங்கரன் நற்சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடி யிணையே குறுகினோமே.

### திருவாசகம்

வேண்டத்தக் கதறிவோய்நீ
வேண்டமுழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ
வேண்டி யென்னைப்பணி கொண்டாய்
வேண்டி நீயாதருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

புவனநாயகனே அகவுயிர்க் கமுதே
பூரணா ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க்கிரங்கும்
பசுபதீ பன்னகா பரணா
அவனிஞாயிறு போன்றருள் புரிந்தடியேன்
அகத்தினும் முகத்தலை மூதூர்
தவளமாமணி பூங்கோயி லுமமர்ந்தாய்
தனியனேன் தனிமை நீங்குதற்கே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மிமிகு திருவா ரூரின்
மழவிடையாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப் பிறந்த
பழஅடியார் ரொடுங் கூடி எம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

முன்னேவந்தெதிர்தோன்றும்முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ்சடையண்ணல்மெய்யருள்பெற்றுடையவனோ
என்னேஎன்மனந் திரித்த இவன்யாரோ என நினைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்திர சொரூபா நமோநம
ஞான பண்டித சாமீ நமோநம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்ட விநோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்பரம வீரா நமோநம கிரிராஜ
தீபமங்கள ஜோதி நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவகுஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈதலும்பல கோலால பூஜையும்
ஓதலும் குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத வேவையும் மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பீர நாடாளு நாயகா வயனூரா
ஆதரம்பயி லாரூர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முன்னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதியந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நன்னாடதில்
ஆவினன் குடிவாழ்வான தேவர்கள்பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகோற்சவ காலத்தில் ஓதவேண்டிய பண்கள் அப்பண்ணில் அமைந்துள்ள தேவாரங்களில் சில கொடித்தம்பத்தின் அருகில் பாடவேண்டியது

பண் - தக்கராகம்

பாடிய நாயனார் - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்க
சுடர்சடை சுற்றிமுடித்து
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ
வாரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலமெலாஞ் செய்து
பாச்சிலாச் சிராமத்துறை கின்ற
மண்வளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே.

மடையில் வாழை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவம் என்கொலோ.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகோற்சவ காலத்தில் ஓதவேண்டடிய பண்கள் அப்பண்ணில் அமைந்துள்ள தேவாரங்களில் சில கொடிமரத்துக்கருகில் மூசிக தாளத்தின்போது பாடவேண்டியது

பண் -காந்தார பஞ்சமம்

பாடிய நாயனார் - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்த கூற்
றஞ்ச உதைத்தனை அஞ்செலுத்துமே.

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.
இதுவோ எமையாளுமாறீவ தொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே.

திருநாவுக்கரசு நாயனார்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தாக் கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமசி வாயவே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகோற்சவ காலத்தில் ஓதவேண்டிய பண்கள் அப்பண்ணில் அமைந்துள்ள தேவாரங்களில் சில கொடித்தம்பத்தின் அருகில் சிம்ம தாளத்தின்போது பாடப்படவேண்டியது.

### பண் - நட்டபாடை

பாடிய நாயனார் - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

தோடுடையசெவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமலரான்முனை நாட்பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார் வினைவழுவா வண்ணமறுமே

மூவரென இருவரென முக்கணுடை மூர்த்தி
மாவின் கனிதூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவம் வினையறுப்பார் பயில்பாலாவியின் கரைமேல்
தேவன் எனையாள்வான் திருக்கேதீச் சரத்தானே.

பாடிய நாயனார் - சுந்தரமூர்த்தி நாயனார்

நத்தார் படைஞானன் பசுவேறிந் நனை கவிழ்வாய்
மத்தம்மத யானை யுரிபோர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான் திருக்கேதீச் சரத்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடித்தம்பத்தின் அருகில் ஓதவேண்டிய இரண்டாவது பண்

## முருகன் கோவிலில் பண் - இந்துளம்.

பாடிய நாயனார் - திருநாவுக்கரசு நாயனார்

திருச்சிற்றம்பலம்

சடையாயெனுமால் சரண் நீயெனுமால்
விடையாயெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே.

ஆறுகொலாமவர் அங்கம் படைத்தன
ஆறுகொலாமவர் தம்மகனார் முகம்
ஆறுகொலாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொலாம் சுவை யாக்கின தாமே.

திருச்சிற்றம்பலம்

பாடிய நாயனார் - சுந்தரமூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறைசூடி பெருமானே யருளாளா
எத்தான்மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்துறையுள்
அத்தாவுனக்காளாயினி அல்லேன் எனலாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொடியேற்றத்தின் போதும்**
**கொடி இறக்கத்தின் போதும்**
**சுவாமி வெளிவீதியுலா புறப்பட முன்**
**முதலாவது சந்தியான பிரம்ம சந்தியில்**

**பாடவேண்டிய பண் - மேகராகக் குறிஞ்சி**

பாடிய நாயனார் - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

நீறு சேர்வதொர் மேனியார் நேரிழை
கூறு சேர்வதொர் கோலமாய்ப்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர்சடை அண்ணலே.

புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி
அறிவழிந்திட் டைம் மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள் செய்வான் அமருங் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மர மேறி
முகில் பார்க்கும் திருவையாறே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகோற்சவ காலத்தில் ஓதவேண்டிய பண்கள்

## கிழக்கில் - (இந்திரசந்தி)

### பண் - காந்தாரம்

பாடிய நாயனார் - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே

பாடிய நாயனார் - திருநாவுக்கரசு நாயனார்

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான் மகளொடும்பாடி
போதொடுநீர்சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல் ஐயாரடைகின்ற போது
காதன் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகோற்சவ காலத்தில் ஓதவேண்டிய பண்கள் அப்பண்ணில் அமைந்துள்ளதேவாரங்களில் சில தென்கிழக்கில் (அக்கினிச்சந்தி) பாடவேண்டியது

பண் - கொல்லி

பாடிய நாயனார் - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்ல∴துறும் கழுமலவள நகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

பாடிய நாயனார் - திருநாவுக்கரசு நாயனார்

கூற்றாயினவாறு விலக்க கிலீர்
கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின கம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை யம்மானே.

பாடிய நாயனார் - சுந்தரமூர்த்தி நாயனார்

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினும்சார்பினும்தொண்டர்தருகிலா
பொய்மையாளரைப்பாடாதேஎந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதரும்சோறும்கூறையும்ஏத்தலாம்இடர்கெடலுமாம்
அம்மையேசிவலோகம்ஆள்வதற்கியாதும்ஐயுறவில்லையே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகோற்சவ காலத்தில் ஓதவேண்டிய பண்கள் அப்பண்ணில் அமைந்துள்ள தேவாரங்களில் சில தெற்கில்(யமசந்தி) பாடவேண்டியது

பண் - கௌசிகம்

பாடிய நாயனார் - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாம நமச்சி வாயவே.

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலி நீள்குடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே

குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்ற நூற்கருத்து நீயருத்தமின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்து முன்னுரைப்பதென்முகம்மனே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகோற்சவ காலத்தில் ஓதவேண்டிய பண்கள் அப்பண்ணில் அமைந்துள்ள தேவாரங்களில் சில
# தென்மேற்கில் (நிருதிசந்தி)பாடவேண்டியது

பண் - நட்டபாடை

பாடிய நாயனார் - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமலரான்முனை நாட்பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார் வினைவழுவா வண்ணமறுமே

பாடிய நாயனார் - சுந்தரமூர்த்தி நாயனார்

நத்தார் படைஞானன் பசுவேறிந் நனை கவிழ்வாய்
மத்தம்மத யானை யுரிபோர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான் திருக்கேதீச் சரத்தானே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகோற்சவ காலத்தில் ஓதவேண்டிய பண்கள் அப்பண்ணில் அமைந்துள்ள தேவாரங்களில் சில மேற்கில்(வருணசந்தி)பாடவேண்டியது

பண் - சீகாமரம்

பாடிய நாயனார் - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க் காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்ப புகழ்நாமம் செவி கேட்க
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமி ருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

தையலால் ஒருபாகம் சடைமேலாலாள் அவளோடும்
ஐயந்தேர்ந்துழல் வாரோர் அந்தணனார் உறையுமிடம்
மெய்சொல்லா இராவணனை மேலோடி ஈடழிடத்துப்
பொய்சொல்லா துயிர் போனான் புள்ளிருக்கு வேளூரே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகோற்சவ காலத்தில் ஓதவேண்டிய பண்கள் அப்பண்ணில் அமைந்துள்ள தேவாரங்களில் சில வடமேற்கில்(வாயுசந்தி) பாடவேண்டியது

பண் - தக்கேசி

பாடிய நாயனார் - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

பூவார் மலர் கொண் டடியார் தொழுவார் புகழ்வார் வானோர் கள்
மூவார் புரங்கள் எரித்தவன்று மூவார்க்கருள் செய்தார்
தூமாதமழைநின்றதிர வெருவித்தொறுவின் நிரையோடும்
ஆமாம்பிணை வந்தணையுஞ்சாரல் அண்ணாமலையாரே.

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியின் உரிதோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா எனநின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகராரே.

திருச்சிற்றம்பலம்

பாடிய நாயனார் - சுந்தரமூர்த்தி நாயனார்

ஆலந்தா னுகந்து அமுதசெய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தை யுளானை
ஏலவார் குழலாள் உமைநங்கை
என்றும் ஏத்திவழி படப்பெற்ற
காலகாலனைக் கம்ப னெம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகோற்சவ காலத்தில் ஓதவேண்டிய பண்கள்
## வடக்கில் குபேரசந்தியில்
## பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மடையில் வாழை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவம் என்கொலோ.

தொழுவார் இருவர் துயரம் நீங்கவே
அழலாய் ஓங்கி அருள்கள் செய்தவன்
விழலார் மறுகில் விதியால் மிக்க எம்
எழிலார் சோற்றுத்துறை சென்றடைவோமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகோற்சவ காலத்தில் ஓதவேண்டிய பண்கள் அப்பண்ணில் அமைந்துள்ள தேவாரங்களில் சில வடகிழக்கில்(ஈசானசந்தி)பாடவேண்டியது

பண் -சாளாபாணி

சாளாபாணியில் அமைந்த தேவாரங்கள் செல்லரித்து அழிந்ததால் பதிலாக சாதாரி என்னும் பண் பாடப்படுகிறது.

,

பாடிய நாயனார் - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

எந்தமதுசிந்தைபிரியாதபெருமானெனஇறைஞ்சிஇமையோர்
வந்துதுதிசெய்யவளர்தூபமொடுதீபமலிவாய்மையதனால்
அந்தியமர்சந்திபலஅர்ச்சனைகள்செய்யஅமர்கின்றஅழகன்
சந்தமலிகுந்தளநன்மாதினொடுமேவுபதி சண்பை நகரே.

வானவர்கள் தானவர்கள் வாதைபட
வந்ததொரு மாகடல் விடம்
தானமு செய்தருள் புரிந்த சிவன்
மேவுமலை தன்னை வினவில்
ஏன மின மானினொடு கிள்ளை தினை
கொள்ள எழிலார் கவணினால்
கானவர் தம் மாமகளிர் கனகமணி
விலகு காளத்திமலையே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துதிக்கும் தெய்வத் துதிப்பாக்கள்.

### வீட்டு வைரவர் கோவில்

வீட்டு வைரவ பெருமானே
வீரம் கொண்ட பெருமானே
அட்ட திக்கும் காக்கும்
எங்கள் வைரவப் பெருமானும்
வீட்டை காத்திடும் குலதெய்வமாய்
வீற்றிருந்து அருள் தருவாரே
எட்டாத உன்னடியை பக்தியோடு
எட்டி வந்தவரை சேருமையா

### சமாது தங்க விநாயகர் ஆலயம்

தங்க விநாயகப் பெருமானே
தடைகள் யாவும் உடைப்பவரே
அங்கத் தந்தம் உடைத்தே
அருமைப் பாரதம் தந்தவரே
எங்கும் அருளைப் பரப்பிடும்
எங்கள் கணபதிப் பெருமானே
பங்கமிலா பக்தி கொண்ட
பக்தரும் பற்றியுளார் பாதமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம்

பக்தர் தமக்கே அருளிட
பத்திரகாளி தாயும் வந்தாரே
பக்கமெல்லாம் பக்தர் சூழ்
பண்பான நகரின் கண்ணே
திக்கெட்டும் புகழ் பரப்ப
திருகோணமலை வந்த தாயே
பக்தரும் பக்தி கொண்டே
பாதமது வந்தாரே சேர்த்திடம்மா

## கிருஷ்ணன் கோவில்

பத்து வடிவம் கொண்டவரே
பக்தரை காக்க வந்தவரே
நித்தம் எமக்கு அருளிடவே
நிமிர்ந்து நிற்கும் ஆலயமே
சித்தம் வைத்தே என்றும்
சீலமாய் தொழுத பக்தரும்
நித்தம் நின்னடி காணவே
நீளுலகு விட்டு வந்தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்துக்குமார சுவாமி கோவில்

என்றும் முத்துக்குமார சுவாமியாய்
இருந்தே அருள் தருபவரே
என்றும் அடியாரை காத்திடவே
அவதரித்த எங்கள் பெருமானே
என்றும் உன்னடி தொழுதே
ஆனந்தமாய் வாழ்ந்த அடியவரும்
என்றும் உன்னடி இருந்திடவே
ஆவலாய் வந்தவரை அடிசேருமையா

## திருக்கோணேஸ்வரம் ஆலயம்

திருக் கோணேஸ்வரப் பெருமானே
திக்கெட்டும் புகழ்பரப்பும் பெருமானே
திருஞான சம்பந்தர் பாடிப்பரவிட
திருவருள் கொண்ட ஆதிசிவனே
திருப்தியோடு தினமும் போற்றிப்பாடி
திகட்டாத பக்தி கொண்டவரும்
திருகோணமலை நாயகரின் தாள்
தினமும் கண்டிட வந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருமாரி அம்மன் கோவில்

கருணை பொங்க வந்த
கருமாரி அம்மன் கோவில்
வரும் பக்தர் துயர்துடைக்கும்
வனப்புமிகு எங்கள் அம்மன்
உருகித் தினமும் வணங்கிய
உன்னடியாரும் உன்னடி தேடியே
வருகின்றார் பக்தி கொண்டே
வரமளித்தே அருளுமம்மா தாயே.

## சிவன் கோவில்

சீர்பெறு உலகை ஆளும்
சிவன் அருட் கோவில்
ஊர்பல போற்றிப் பாட
அருளாட்சி செய்யும் ஆதிசிவன்
வார்சடை சிவனைப் போற்றி
வாழ்நாளில் வாழ்ந்த பக்தர்
பார்போற்ற விண் உலகில்
பரமசிவன் பாதம் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் பாக்கள்

## மனைவி

கண்ணை இமை காப்பதுபோல்
காத்த எந்தன் கணவரே
கண்ணில் கண்ணீர் வராமல்
கவனமாய் குடும்பம் பார்த்தவரே
கண்ணீர் வழிய அழுகின்றேன்
ஆறுதல் கூற வாருங்கள்
கண்காணாத இடம் சென்றதாலே
கதறித் தினமும் அழுகின்றேன்.

## பிள்ளைகள்

அன்பையும் பண்பையும் அறிவையும்
ஊட்டி வளர்த்த தந்தையே
இன்று அமைதியாக உறங்குகின்றீர்
உறக்கமின்றி அழுகின்றோம் அப்பா
என்றும் கதைக்கும் அப்பாவே
ஏனப்பா மௌனமானாய் இப்போது
என்றும் அப்பாவின் நினைவோடே
வாழ்கின்றோம் தினம் அழுதபடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள்

என்றும் மருமக்களாய் பாராது
மக்களாகவே பார்த்த மாமாவே!
அன்பாக வரவேற்றே எம்மை
ஆதரித்த பண்பான மாமாவே
இன்று எம்மையெல்லாம் விட்டு
எங்கு சென்று விட்டீர்கள்
என்றும் ஏங்கி அழுகின்றோம்
அன்பான மாமாவை இழந்தே!

## பேரப்பிள்ளைகள்

எந்த வேளையும் கதைப்பீரே
என்ன உண்டீர்களென கேட்பீரே
எந்த சோகமும் இல்லாமல்
வளர்ந்திட அன்பை பொழிந்தீரே
சிந்த கண்ணீர் விடாமல்
சீராய் பார்த்த உறவே
சிந்திக் கண்ணீரும் ஓடுகிறதே
சோகம் தீர்க்க வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரிகள்

என்றும் ஒற்றுமை உணர்வுடன்
அன்பாய் இருந்த சகோதரரே
இன்று எம்மை எல்லாம்
அழவைத்து சென்றதும் ஏனோ
இன்னல் உற்றே நாமும்
இருக்கும் வேளை களிலே
நன்றாய் ஆறுதல் கூறும்
உறவை இழந்தே அழுகின்றோம்.

## மைத்துனர் மைத்துனிமார்

பண்பு தனையே என்றும்
பாங்காய் கொண்டு வாழ்ந்தவரே
கண்ணான கடமைகள் யாவையும்
கச்சிதமாய் செய்த கண்ணியவான்
வண்ணமுற வாழ்ந்தே இன்று
வானுலகு சென்றதும் ஏனோ
கண்ணீர் விட்டே அழுகின்றோம்
காலன் கவர்ந்து சென்றதாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள்

பெற்ற பிள்ளைகள் போன்றே
பெறா மக்கள் மீதிலும்
பற்று பாசம் என்றும்
பெரிதாய் கொண்ட உறவே
வற்றாத துயரம் தந்தே
வானுலகம் சென்றதும் ஏனோ
பற்று கொண்டதாலே நாமும்
பரிதவித்தே தினம் அழுகின்றோம்.

## மறு மருமக்கள்

மற்ற மறுமருமக்கள் மீதிலும்
மறுவில்லா பாசம் கொண்டவரே
பற்று கொண்டே எம்முடன்
பழகும் உத்தம உறவே
உற்ற பாசம் உற்றதாலே
உறவுகள் நாமும் அழுகின்றோம்
சுற்றம் எல்லாம் சேர்ந்தேயழ
சீருலகு விட்டதும் ஏனோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார் உறவினர் அயலவர்

உற்ற உற்றாருடன் என்றும்
உற்ற உரிமையோடு வாழ்ந்தவரே
உற்ற உறவினர் தமக்கும்
உற்ற உதவிகளும் செய்தவரே
உற்ற அயலவர் உடன்
ஒற்றுமையாய் என்றும் இருந்தவரே
உற்ற குணம்பல கொண்டதால்
உகுக்கின்றோம் கண்ணீரை நாமும்.

## தேற்றம்

நீ உண்மை
நான் உண்மை
யாவரும் உண்மை
என்வீடு உண்மை
என்சொத்து உண்மை
உண்மையான உண்மையை
உணரும் வரை
உண்மையே உண்மை இல்லை
என்பதுதான் உண்மை - இவ்உண்மையை
உணர்வாய்! உளம் தேற்றுவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சிங்கராஜா முருகையா அவர்களின் வாழ்க்கை வரலாறு

இலங்கை மணித்திருநாட்டின் அழகும் அற்புதமும் வாய்ந்த சிறப்புமிக்க இடமாக மிளிர்வது திருகோண மலை. இத்தகைய சிறப்புப் பொருந்திய திருகோண மலையை பிறப்பிடமாகக் கொண்டவர்தான் அமரர் சிங்கராஜா முருகையா அவர்கள். இவரது தந்தையார் பெயர் பொன்னையா சிங்கராஜா அவர்கள்.

பொன்னையா சிங்கராஜா அவர்கள் சிறப்புமிகு யாழ் மாவட்டம் காங்கேசன்துறையைச் சேர்ந்தவர். தாயார் வேலுப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை அவர்கள் அருட் திரு பூமியான மாவிட்டபுரம் குமார கோவிலடியைச் சேர்ந்தவர். இவர்களின் வாழ்க்கைக்காலம் எல்லோரா லும் பெரிதும் விரும்பப்படுகின்ற புண்ணிய பூமியான திருகோணமலையிலேயே பெரிதும் கழிந்தது. இறை நம்பிக்கை கொண்ட இவர்களின் இல்லற நல்லற வாழ்வு திருகோணமலை 44-இராஜவரோதயம் வீதியில் அமையப்பெற்ற அழகிய வீட்டிலேயே கழிந்தது.

இக்காலப் பகுதியில்த்தான் இறைவன் திருவருளால் ஐந்து அழகிய பிள்ளைகள் பிறந்தார்கள். மூத்த மக னுக்கு ஆறுமுகதாஸ் என்னும் பெயரினையும் இரண் டாவது பிள்ளையாகப் பிறந்த மகளுக்கு பரமேஸ்வரி என்னும் பெயரினையும் சூட்டினர். மூன்றாவது பிள்ளை யாக பிறந்தவர்தான் முருகையா அவர்கள். நான்காவ தாக பிறந்த மகனுக்கு கோணலிங்கம் என்னும் பெயரி னையும் ஐந்தாவதாகப் பிறந்த மகளுக்கு ஈஸ்வரி என்னும் பெயரினையும் சூட்டி மகிழ்ந்தனர்.மூன்றாவது பிள்ளையாகப் பிறந்த முருகையா அவர்கள் சகோதரர் களைப் போலவே அன்பும் பண்பும், மிக்கவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கமும் அமைதியும் நிறைந்தவராக வளர்ந்துவரலா னார்...

சிறிய வயதிலேயே அறிவுத்திறன் மிக்கவராக திகழ்ந் தார். இவ்வாறு பெற்றோரின் அரவணைப்பிலும் சகோ தரர்களின் பாசப் பிணைப்பிலும் வளர்ந்துவந்த அமரர் சிங்கராஜா முருகையா அவர்கள். தனது கல்வி நிமித்தமும் காலத்தின் தேவை நிமித்தமும் சிறிய பருவத்தில் இலக்கம் 12 சமாது ஒழுங்கையில் அமைந்த தனது அப்பப்பா .அப்பம்மாவின் வீட்டில் அவர்களின் அன்புப் பிடியில் வளரத் தொடங்கினார். இவரது அப்பப்பாவான தர்மலிங்கம் அவர்களும் அப்பம்மாவான அன்னப்பிள்ளை அவர்களும் அமரர் அவர்களை சிறப்பாக வளர்த்துவந்தனர். அமார் அவ்ர்கள் தனது கல்வியினை தி/ விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரம் வரை சிறப்பாகப் பயின்றார். அதன் பிற்பாடு தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இலங்கைத் துறைமுக அதிகார சபையில் 1968ம் ஆண்டு முகாமைத்துவ உதவியாளராக தனது கடமையை மிகவும் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் ஆற்றத்தொடங்கினார். இதன் காரணமாக உத்தியோக த்தர் யாவரிடத்திலும் நன்மதிப்பு மிக்கவராகத் திகழ்ந் தார். இவ்வாறு தனது கடமையினை கண்ணியத்தோடு ஆற்றிவருகின்ற காலப்பகுதியில்த்தான் அமரர் அவர் களும் திருமண வயதினை அடைந்திருந்ததன் காரண மாகவும் யாழ்ப்பாணம் அச்சுவேலி தோப்பு என்னும் அழகிய வளம் நிறைந்த ஊரின் கண்ணே உள்ள ஆஸ் பத்திரி ஒழுங்கையில் வசித்துவந்த அன்பும் , பண்பும் நிறைந்த இராமலிங்கம் இலட்சுமிப்பிள்ளை தம்பதியின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் மூத்த மகளான ஞானம்மாவை இறைவன் திருவருளால் 1970.06.06ம் திகதி திருமணம் செய்து கொண்டார்.

அமரர் சிங்கராஜா முருகையா அவர்களின் இல்லறமும் நல்லறமாகவே தொடர்ந்தது.... நல்ல அறிவுத்திறனும், ஆற்றலும், பண்பும் கொண்ட மனைவி அமையப்பெற்றதன் காரணமாக அமரர் அவர்களது வாழ்வு சீரும் சிறப்புமாகவே அமைந்தது. அமரர் அவர் களும் குடும்பப் பொறுப்பு மிக்கவராகவும் அன்பாகவும் பண்பாகவும் யாவரையும் அனுசரித்து செல்லக்கூடிய நல்ல குண இயல்பினைக் கொண்டவராகவும் விளங்கி னார். இதன் காரணமாக வாழ்க்கை வசந்த மயமாகவே இருந்தது. இவ்வாறு வாழ்ந்துவருகின்ற காலப்பகுதியில் த்தான் இறை பக்தி கொண்ட இருவருக்கும் இறைவன் திருவருளால் மூன்று முத்தான பிள்ளைச் செல்வங்கள் கிடைக்கப்பெற்றனர். அவர்களுக்கு சிவஈஸ்வரராஜா சிவனேஸ்வரன் `பிரதீஸ்வரன் ஆகிய அற்புத நாமங்க ளைச் சூட்டி மகிழ்ந்தனர். மூன்று ஆண் பிள்ளைகளும் அழகும் அமைதியும் நிறைந்த பண்புள்ளங் கொண்டவர் களாகவும் அறிவுத் திறன் மிக்கவர்காளகவும் வளர்ந்து வருவது அமரர் அவர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது.

அமரர் அவர்கள் தனது பிள்ளைகளின் வளர்ச்சியிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். அவர் கள் சிறந்த முறையிலே கல்வி கற்பதற்கு உறுதுணை யாக இருந்து செயற்பட்டார். அதுமட்டுமன்றி அவர்கள் பொருளாதாரத் துறையிலும் மேம்படவேண்டும் என்பதற் காக மூத்த மகனான சிவாஈஸ்வரராஜா அவர்களை கனடா நாட்டுக்கும் அனுப்பிவைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே யாழ் சந்தையின் உரிமையாளராக இருந்து சிறப்பாக செயற்படுத்தி வருகின்றார்.
அதேபோல் மூன்றாவது மகன் பிரதீஸ்வரன் அவர்களை யும் அவரின் முன்னேற்றம் கருதி கனடா நாட்டுக்கு அனுப்பி வைத்தார். இரண்டாவது மகன் சிவனேஸ்வரன் அவர்களை தன்னோடு வைத்துக்கொண்டார். திருகோண மலை தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை யின் சிரேஷ்ட வாணிப அதிகாரியாக உள்ளார்.மூன்று பிள்ளைகளையும் பட்டதாரிகளாக்கி பெருமையும் பெரு மகிழ்வும் கொண்டார். கடமைகள் யாவற்றையும் சிறப்பாகச் செய்த அமரர் அவர்களுக்கு 2020.06.06ம் திகதி பொன்விழா எடுத்தும் மகிழ்ந்தனர்.
இவ்வாறு பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு உதவியது போன்று அவர்களுக்கு அந்தந்த காலப்பகுதிகளில் செய்ய வேண்டிய திருமணச் சடங்குகளையும் முறைப் படி செய்து முடித்தார். மூத்த மகன் சிவஈஸ்வரராஜா அவர்களுக்கு நடராசா சோமகுமாரி தம்பதிகளின் அறிவும் பண்பும் நிறையப்பெற்ற மலர்மகள் அவர்களை 2000.06.11ம் திகதி திருமணம் நடத்தி வைத்தார்.
இரண்டாவது மகன் சிவனேஸ்வரன் அவர்களுக்கு சுப்பிரமணியம் மங்கையற்கரசி தம்பதிகளின் அறிவும் பண்பும் நிறைந்த மகளான சந்திரகலா அவர்களுக்கு 2006.02.10ம் திகதி திருமணம் முடித்துவைத்தார்.
மூன்றாவது மகன் பிரதீஸ்வரன் அவர்களுக்கு தியாக ராஜா சத்தியபாமா தம்பதிகளின் அறிவும் பண்பும் நிறைந்த மகளான திவியா அவர்களை 2016.01.23ம் திகதி திருமணம் முடித்துவைத்தார். பெண்பிள்ளைகள் இல்லையே என்ற கவலையில் இருந்த அமரர் அவர் களுக்கு பெற்ற பிள்ளைகள் போன்ற மருமக்கள் கிடைத்ததையிட்டு பெரும் மகிழ்வு கண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அன்பு சாம்ராஜ்ஜியத்தில் வாழ்ந்து வந்த அமரர் சிங்கராஜா முருகையா செய்த இறை பணியும் புண்ணியங்களும் சேர்ந்து நல்ல அழகான அன்பான பேரப்பிள்ளைகளைக் கொடுத்தது. மூத்த மகன் சிவ ஈஸ்வரரர்ஜா மலர்மகள் தம்பதிகளுக்கு 2002.01.05ம் திகதி சன்ஜி என்ற மகனும் 2007.08.25ம் திகதி ஜனகன் என்ற இன்னொரு மகனும் கிடைக்கப்பெற்றனர். இரண்டாவது மகன் சிவனேஸ்வரன் சந்திரகலா தம்பதிகளுக்கு 2009.12.07ம் திகதி கஜடக்சன் என்ற மகனும் 2014.11.06ம் திகதி சேஷயன் என்ற இன்னொ ரு மகனும் கிடைக்கப்பெற்றனர். மூன்றாவது மகன் பிரதீஸ்வரன் திவியா தம்பதிகளுக்கு 2019.03.22ம் திகதி பிறித்திகா என்ற மகளும் 2021.03.17ம் திகதி லினுஷா என்ற இன்னொரு மகளும் பிறந்தனர். இவ்வாறு அறிவும், அன்பும், அழகும் நிறையப்பெற்ற பேரப்பிள்ளைகளைக் கண்டு பேரானந்தம் கொண்டார். இவ்வாறு தனது குடும்பத்தினை முன்னேற்றி ஆனந்தம் கண்டது மட்டுமல்ல எல்லோரும் நன்றாக இருக்கவேண் டும் என்று எண்ணுகின்ற உயர்ந்த எண்ணம் கொண்ட வர்தான் அமரர் அவர்கள். இத்தகைய சீரிய உள்ளத்தி னையும் செயற் திறனினையும் சிறப்பாகக் கொண்ட அமரர் சிங்கராஜா முருகையா அவர்கள் தனது கடமை யையும் கண்ணியம் தவறாது செய்து 36 வருடங்கள் சிறப்பாகச் சேவை ஆற்றி 2004ம் ஆண்டு தை மாதம் 18ம் திகதி தனது 58வது வயதில் ஓய்வுபெற்றார்.

இவ்வாறு ஓய்வு பெற்ற அமரர் அவர்கள் அதன் பின்னும் ஓயவில்லை. ஆலயப் பணி களை ஆனந்தமாகச் செய்துவந்தார். அது மட்டுமன்றி சமூகப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகுகின்ற சுபாவத்தினைக்கொண்ட அமரர் அவர்கள்.சிறு பிள்ளைகள் முதற்கொண்டு பெரியவர்கள் வரை அன்பாகவும் பண்பாகவும் பழகி சமூகத்தில் நல்லதொரு பெயரைப் பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக அமரர் சிங்கராஜா முருகையா அவர்கள் தனது பெற்றோர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் யாவற்றையும் சிறப்பாகச் செய்து அன்புச் சகோதரர்களோடும் அன்பாக இருந்து அதன் பிற்பாடு குடும்பம் என்று வந்ததும் தனது மனைவி பிள்ளைகளை எந்தக் குறையும் இல்லாமல் அன்பாகப் பார்த்து பிள்ளைகளையும் சகல வழிகளாலும் உயர்வடையச் செய்து மருமக்களோடும் மக்களாகவே பாசம் காட்டி நடந்து எல்லாவற்றுக்கும் மேலாக பேரப்பிள்ளைகள் மீதிலே அளவு கடந்த பாசத்தினையும் கொண்டு உறவினர்கள் யாவரிலும் உண்மைப் பாசத்தினைக் கொண்டு அயலவர்கள் நண்பர்கள் உடனேயும் உண்மைத் தன்மையோடு அன்பாகவும் பண்பாகவும் பழகி எல்லார் மத்தியிலும் நற்பெயரைப் பெற்று மனிதருள் மாணிக்கமாக வாழ்ந்து வந்த அமரர் சிங்கராஜா முருகையா அவர்கள் தனது அன்பான மனைவி பிள்ளைகள் மருமக்கள் பேரப் பிள்ளைகள் உறவினர்கள் அயலவர்கள் நண்பர்கள் யாவரும் கதறி அழ 2023.12.08ம் திகதி அன்று இறை அடி சேர்ந்தார்...................!!!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அமரர் சிங்கராஜா முருகையா அவர்கள் வானுலகிலும் தெய்வத்துள் வைக்கப் படுவார் என்னும் வள்ளுவர் வாக்கினை உளங்கொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லொரும் இறைவனை இறைஞ்சுவோமாக!

ஓம் சாந்தி !!! ஓம் சாந்தி !!! ஓம் சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமான சிவஸ்ரீ.சோ.இரவிச்சந்திரக்குருக்களின் இரங்கற் செய்தி.

அமரர்.சிங்கராஜா முருகையா அவர்கள் 08.12.2023ம் திகதி வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார். அன்னார் யாழ்ப்பாணம் காங்கேசன்துறையைச் சேர்ந்த சிங்கராஜா தெய்வானைப்பிள்ளையின் புதல்வர் ஆவார். இவருக்கு இரண்டு ஆண் சகோதரர்களும் இரண்டு பெண் சகோதரிகளும் உண்டு. இவர் 1970ம் ஆண்டில் அச்சுவேலியை பிறப்பிடமாகக் கொண்ட ஞானம்மாவை மணம் புரிந்து 3 ஆண்பிள்ளைகளுக்கு தந்தையுமானார்.

இவர் இலங்கைத் துறைமுக அதிகார சபையில் 1968ம் ஆண்டிலிருந்து 2004ம் அண்டுவரை 36 வருடங்கள் இலிகிதராக கடமை புரிந்து ஓய்வு பெற்றார். சமய பற்றும் கடவுள் பக்தியும் கொண்ட இவர் எல்லா கோவில்களுக்கும் தரிசனம் செய்வார். ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் மீது முழு ஈடுபாடு கொண்டு அம்பாளுக்கு வாகனங்கள் செய்வித்து அன்பளிப்பாக தேவஸ்தானத்திற்கு வழங்கினார். திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் எல்லா உற்சவ காலங்களிலும் கோவிலுக்கு வருகைதருவார். எல்லாரிடமும் பண்பாகவும் அன்பாகவும் பழகுவார். அவருடைய இழப்பானது அவரது குடும்பத்திற்கு மட்டுமன்றி எல்லோருக்கும் பேரிழப்பாகவே அமைந்துள்ளது. அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் பண்பும் நிறைந்தவர்

அப்பன் முருகன் நாமத்தைக் கொண்ட சிவன் நாமம் கொண்ட இராமலிங்கம் லிங்கம் நாமத்தைச் சேர்ந்த எங்கள் குடும்பத்தின் மூத்த மகளுக்கு வாழ்க்கைத் துணையாக வந்த துணைவரே !
உங்கள் திடீர் பிரிவு எனக்கு மட்டுமல்ல என் குடும்பத்தில் அனைவருக்கும் ஆறாத துயரத்தைத் தருகிறது. இராமலிங்கம் குடும்பத்திற்கு நல் முத்துக்களாக மூன்று முத்துக்களை தவம் பவா பிரபாவை தந்து லிங்கம் குடும்பத்திற்கு பெருமை சேர்த்தீர்கள். என் மகன்களை அன்பால் அரவணைத்தீர்கள். பெரியப்பாவின் இடம் இப்போ அவர்களுக்கு வெற்றிடமாகி விட்டது. என் குழந்தைகளை மட்டுமல்ல எல்லோர் குழந்தைகளையும் அன்பால் அரவணைத்தீர்கள். நாம் எல்லோரும் கலங்கி நிற்க திடீரென பிரியாவிடை பெற்றீர்களே!
உங்களது ஆத்மா சாந்தியடைய எனது குடும்பத்தின் சார்பாக பிரார்த்திக்கின்றோம். என் அருமை அத்தானே! பாரிடத்தை விட்டு பறந்தனையோ! மச்சாள்! மச்சாள்! தம்பி தம்பி ! என மனம்விட்டு அழைத்த அன்புக்குரல் என்றும் என் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கும் உங்கள் கனத்த நினைவுகளைச் சுமந்து உங்கள் ஆத்மா சாந்தியடைய தோப்புப் பிள்ளையார் மீனாட்சி சரஸ்வதி அம்மன் துணை !!!

ஞானேஸ் மச்சாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியப்பா......!

நாடு கடந்து பிறந்து
நாடு கடந்து வளர்ந்து
நாடு கடந்து வாழ்ந்தாலும்
ஊரின் வாசனை
ஊரின் வெப்பம்
ஊரின் அன்பும்
எங்களுக்கு திருகோணமலைதான்!
ஒரு பக்கத்தில் புதல்வர் விநாயகரும்
மறு பக்கத்தில் தந்தை சிவனும்
சமாது வீதி நடுவில்
எங்கள் பெரியப்பா பெரியம்மா வீடும்
எங்களை வரவேற்காத நாள் இல்லை.
எங்களை சொந்தம் கொண்டாட தவறிய தினமும்
இல்லை
பெரியப்பாவின் செல்லமாக பல குழந்தைகள்
அதில் நானும் ஒருவன் என்று
இன்று நினைத்துப் பார்க்கும்போது
பாசத்தால் உருகுகிறேன்.
மிதி வண்டியில் ஏற்றித் திரிய
பிறந்தநாள் நாங்கள் மறந்தாலும்
நினைவோடு அர்ச்சனை செய்ய
ஒரு ஸ்பிறைட் கேட்க
அதை 100 தடவை சொல்லிப்போட்டு வாங்கித்தர....
பெரியப்பாவின் அன்புதான் அவரின் அடையாளம்!
அந்த அன்பும் செல்லமும் எத்தனை வயது கடந்தாலும்
அவரை நினைத்துப்பார்க்கும்போது என்னை
அரவணைக்கும்!

சுந்தர்.v. toronto canada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் ஆசை
## மாமாவுக்காய்.......

ஆசை மாமா என நாம் அன்புடனே
விளித்திட்ட வார்த்தைக்கு மெய்ப்பொருள்
கண்டது போல் உம் உருவமும் உணர்வும் தந்து
பகிர்த்திருந்தீர் பாசத்தை அளவில்லா அன்புடன்
ஆண்டுதோறும் வரும் எம் பிறந்த தினங்கள் எல்லாம்
புத்துயிர் பெற்று விடிவது தொலைபேசி அழைப்பு
தாங்கி வரும் உம் குரல் வழி வாழ்த்துக்களோடுதான்
தவறாமல் அழைத்திடுவீர் ஆசிகள் பல தந்திடுவீர்
கல்வி நிலைகளிலும் வாழ்க்கைப் படிகளிலும்
நாம் அடுத்தடுத்த அடி எடுத்து வைக்கையில்
பெருமையுடன் கூறிக்கொள்வீர் - என்
மருமக்கள் தாம் இவர் என்று
எமக்கான சுபகாரியங்கள் நடைபெறும் போதெல்லாம்
நாம் சீர்பெற்று சிறப்புற வேண்டுமென்றே
உடல்நிலை பாராது அயராது வந்து நிற்பீர்!
தாய் நிகர் உறவாம் எம் தாய் மாமன் நீர்
பம்பரமாய் சுழலும் எம் இயந்திர வாழ்க்கையில்
உமைக்காண நாம் மறந்த போதும் - பொடி நடையாய்
வீடுதேடி வந்திடுவீர் எம் முகம் பார்த்து மலர்ந்திடுவீர்!
இனி எங்கு காண்போம் அந்த திருமுகந்தனை
நீர் மீளாத் துயில் கொண்டது கண்டு - சொந்தங்கள்
மட்டுமல்ல பல நாள் பழகிய அயலவரும் ஒரு சில
நாளே
அறிமுகமானோரும் கதறியகாட்சிகள் கட்டியம்
சொல்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் வாழ்ந்த பண்பான வாழ்க்கைதனை
மரணத்திலும் திருப்தி கொள்ளும் மந்திரம்
தெரிந்ததாலோ
அந்தக் கணபதியும் அன்பினாலே அழைத்துக்
கொண்டார்..!

நல்லிடமே சென்று வாருங்கள் மாமா!
என்றும் வாழ்வீர்கள் எம் இதயங்களில்
ஆற்றிய இறை பணியும் பிறரை அரவணைக்கும்
நற்குணமும்
ஆண்டவன் அடியினில் - உங்களை
அமைதியுறச் செய்யும் இது உறுதி !
சாந்தி அடைந்துவிடும் எம் மாமாவின் நல் ஆத்மா!

அன்பு மருமக்கள்
விபூஷானந்தி உஷானந்தி பிரஷானந்தி இராஜீஷன்
இரஜீந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது இதயத்தில் வீற்றிருக்கும் எங்கள் ஐயா

இப்பூவுலகில் மகத்தான பிறவி மானிடப் பிறவி ஆகும். எனினும் மனித வாழ்வில் வாழ்ந்தவர்கள் கோடி அதேபோல மறைந்தவர்களும் கோடி. இவ்வாறு இவ் வையத்தில் வாழ்ந்து பலர் மடிந்தாலும் சிலரது இழப்பானது எம்மால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. அந்த வகையில் மனிதரில் மாணிக்கமாக அவதரித்து எம்மை எல்லாம் விட்டுப்பிரிந்த சிங்கராஜா முருகையா அவர்களது இழப்பானது ஈடிணையில்லாத இழப்பாகும். ஐயா என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டு வந்த அமரர் அவர்கள் இவ்வுலகில் அவதரித்த மகான் என்றால் அது மிகையாகாது.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்-வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

என்கின்ற வள்ளுவனின் வாக்குக்கு அமைய ஐயா அவர்கள் இவ்வுலகிலேயே வாழவேண்டிய அறநெறிப்படி வாழ்ந்து வானுலகத்திலே வாழும் தேவர்களில் ஒருவருக்கு நிகராக அவர் வாழ்ந்த காலத்திலேயே வைத்து மதிக்கப்பட்ட ஓர் மகத்தான மனிதராவார். இதன் காரணமாகவே ஐயா மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்த பெரும் மனிதராக மதிக்கப் பட்டு வந்தார்.

திருகோணமலைப் பூமியின் சமாது ஒழுங்கையில் வசித்துவந்த மக்களுக்கு எல்லாம் ஒரு வழிகாட்டியாக மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களுக்கு உறுதுணையாக இருந்து எல்லோரிடமும் இனிய மொழியில் கதைபேசி அனைவரையும் மகிழ்வித்த ஒரு பெரியவராக வாழ்ந்தது மட்டுமல்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி என்று கேட்டு வருபவர்களுக்கெல்லாம் தன்னால் முடிந்த பலஉதவிகளை ஈன்ற பெரியார் ஐயா என்பது மறக்கமுடியாத உண்மையாகும்.

அதிகாலையிலேயே கண்விழித்து சமாது பிள்ளையார் ஆலயத்திற்குச் சென்று தரிசிப்பதுடன் பல கோவில் களை வலம்வந்து பின்புதான் தனது வீட்டுக் காரியங் களைத் தொடங்குவார்.

முக்கியமாக அயலவர்களுக்கு ஓர் காவல்த்தெய்வம் போல் இருந்துவந்தவர் ஐயா என்பது அயலவர் யாவரும் அறிவர். தனது குடும்ப அங்கத்தவர்கள் அயலவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் என என்றுமே பிரித்துப்பார்க்காத பெரிய மகானாக ஐயா அவர்கள் வாழ்ந்துவந்தார்.

எமது குடும்ப சொந்த வாழ்வில் எனக்கும் பல வழி களில் வழிகாட்டியாகவும் குடும்ப அங்கத்தவரிடையே அதீத அன்பும் கொண்டு வாழ்ந்ததனால்த்தான் நான் யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த பன்னிரண்டு வருடங்கள் ஆறு மாத காலம் வரை எனக்காக ஐயா அவர்கள் செய்த உதவிகளை என்னால் மறக்க முடியாது. எதிரே என் ஐயா இருக்கிறார் என்ற தைரியத்தில்தான் குடும்ப வாழ்வு தொடங்கிய காலத்தில் இருந்து அமரர் மறையும் வரையில் நான் எக் கவலையும் இல்லாமல் வாழ்ந்து வந்தேன். எம் இனிய ஐயா எங்கு சென்றீர் எம்மைவிட்டு ஏங்கியே தவிக்கிறோம்.

வாழ்வியலில் எவ்வாறு எம்வாழ்வை அமைத்துக்கொள் ள வேண்டும் என்பதனை முறையாக வாழ்ந்துகாட்டிய பெருமை ஐயாவையே சாரும்.

அவர் நற்பண்புகளை எண்ணிப் பார்க்கையில் ............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.நேர்மை தவறாமை

2.ஒழுக்கமுடைமை

3.பக்கச் சார்பின்மை

4.எவ்வித தீய பழக்கமும் இல்லாத தன்மை.

5.மற்றவர்கள் கோராமலே அவர்களுக்கு உதவி புரியும் மேன்மை.

6.அன்பால் அனைவரையும் ஆதரித்து வந்தமை.

7.எத்தருணத்திலும் நிதானம் தவறாமை.

8.குடும்பத்தலைவனாக பொறுப்புடன் நடந்துகொண்டமை

9.சமூகத்தின் பக்கம் தனது பார்வையைச் செலுத்தி வந்தமை.

10.ஏழைகளிடம் அன்பு கொண்டு உதவி புரிந்தமை.

11.சிரித்த முகத்துடன் யாவரையும் வரவேற்று வாழ்ந்து வந்தமை.

12.மனிதாபிமானம் மிக்க மனிதராக வாழ்ந்து வந்தமை.

என்பன இவரிடம் காணப்பட்ட அரிய பண்புகளாகும்.

"அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர்-அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு."

என்கின்ற வள்ளுவனின் குறளுக்கு ஏற்றால் போல் அன்பு இல்லாத பலர் இவ்வுலகில் தமக்கே எல்லாப் பொருளும் தேவை என்று வாழும் மக்களின் மத்தியில் தன் எண்ணத்தில் பிறருடைய நலன் மிகவும் முக்கிய மானது என மகிழும் இயல்புடையவராக வாழ்ந்துவந்த பெருமை அமரர் ஐயாவையே சாரும். இவ்வாறான மாமனிதன் எம்மைவிட்டு பிரிந்துவிட்டார் என எண்ணுகையில் எம் நெஞ்சமெல்லாம் கனக்கிறது.

" தோன்றின் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்ற பொய்யா மொழியின் வாக்கின்படி ஐயா நீங்கள் மற்றவர் மத்தியில் உங்கள் வாழ்வின் அத்தியாயத்தை முடித்துவிட்டீர்கள். ஐயா உங்கள் வாழ்வின் இயல்புகளை எம் வாழ்வில் கடைப்பிடிக்க இறைவனின் அருளினை வேண்டி நிற்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். ஐயா நீங்கள் மறைந்தாலும் எம் இதயத்தில் என்றுமே வீற்றிருப்பீர்கள்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

இரங்கநாதன் உமாகாந்தன்
15 சமாது ஒழுங்கை
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வும் நினைவும்

பிறப்பினால் எவர்க்கும் பெருமை வாராதப்பா -
சிறப்புறவேண்டுமெனில்
நல்ல சேவை செய்ய வேண்டுமப்பா
என்பதற்கிணங்க வாழ்ந்துகாட்டியவர்

அமரர் முருகையா அவர்கள் இவருடைய இழப்பு இவரது குடும்பத்தாருக்கு மட்டுமன்றி நம் அனைவருககுமே பேரிழப்பாகும். அவருடன் பழகிய காலங்களில் நிகழ்ந்த மறக்கமுடியாத நினைவுகளில் ஒரு சிலவற்றை பகிர்ந்துகொள்கிறேன்.

1990ம் ஆண்டு எனக்கு திருகோணமலையில் தொழில் நியமனம் கிடைத்தபோது எனது தந்தையார் தனது உறவுமுறை சகோதரியான ஞானம்மா முருகையா உடன் தங்கியிருப்பதற்கான ஏற்பாடுகளை செய்து தந்தமையால் அவர்களுடனே இருக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

1992ம் ஆண்டு எனக்கு திருமணம் நடைபெற்றபோது அவர்கள் இருவருமே எனக்கு தாய் தந்தை ஸ்தானத்திலிருந்து எங்கள் திருமணத்தை இனிதே நடாத்தி வைத்தனர்.அந்நேரத்தில் எனது கணவர் கொழும்பில் பணி புரிந்தமையால் மீண்டும் அவர்களுடன் இருக்கவேண்டிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதன் பின் எனக்கு மகள் பிறந்து மகனும் பிறந்தனர். அத்தருணங்களிலும் அவர்களது ஒத்தாசை எனக்கு இருந்துகொண்டே வந்தது.

எனது மகளின் திருமணம் அவர்கள் ஆசீர்வாதத்துடனே நடைபெற்றது. அவர் இறப்பதற்கு ஒருசில நாட்களுக்கு முன் எனது பேரக்குழந்தையின் 31ம் நாள் தொட்டிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடும் நிகழ்விற்கு வந்து பேரப்பிள்ளையை ஆசீர்வதித்துச் சென்றமை எமது மனக்கண் முன்னே நிற்கிறது.

அவர் ஒரு நல்ல பண்பான இறை அன்பு கொண்டவர். எந்நேரமும் புன்னகைபூத்த முகத்துடன் வாழ்ந்த ஒருவர் ஆனால் அவரது திடீர் இறப்புத்தான் எமக்கு பேரதிர்ச்சியை தந்துவிட்டது.

எவருக்கும் இல்லை என்று சொல்லாது எந்த ஒரு கோயில் பணியையோ பொதுப்பணியையோ நிறைவேற்றி முடிக்கும் நற்பண்புகளை உடைய உத்தமர். இவரது புன்னகை பூத்த முகமும் கள்ளம் கபடமற்ற சிரிப்பும் என்றும் எம்மனங்களிலிருந்து நீங்கா நினைவலைகளாக..

அவரது ஆத்மாசாந்தியடைய
அனைவரும் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி !!! ஓம் சாந்தி !!! ஓம் சாந்தி !!!

சிவானந்தகுமார் குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுண்ணப் பாடல்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணிந் தும்மெழுகித்

தூயபொன் சிந்தி நிதிநிரப்பி

இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்

எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்

அந்தரர் கோன்அயன் தன்பெருமான்

ஆழியான் நாதன்நல் வேலன்தாதை

எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு

ஏய்ந்த பொற் சுண்ணம் இடித்துநாமே. 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்

காம்பணி மின்கள் கறையுரலை

நேச முடைய அடியவர்கள்

நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்

தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்

திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்

பாச வினையைப் பறித்துநின்று

பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்

வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்

என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்

எம்பெருமான் இம வான்மகட்குத்

தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்

தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்

பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்

பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்

தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்

செங்கனி வாய் இத ழுந்துடிப்பச்

சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்

கங்கை இரைப்ப அராஇரைக்குங்

கற்றைச் சடைமுடி யான்கழற்கே

பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்

பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடி
செம்பொன் செய் சுண்ணம் இடித்துநாமே
16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடி நின்றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்,ருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்,ன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது பாசத்திற்குரிய குடும்பத் தலைவர் சிவபதமடைந்த செய்தி கேட்டு எமக்கு பலவழிகளிலும் ஆறுதலும் தேறுதலும் வழங்கிய யாவருக்கும் நன்றி கூறுகின்ற அதேவேளை மலர் வளையங்களை வைத்தும் மலர் மாலைகளை அணிவித்தும் அஞ்சலி செய்தவர்களுக்கும். நினைவுப் பதாகைகளை வெளியிட்டவர்களுக்கும் அன்னாரின் மரணச் சடங்கிலும் அந்தியேட்டி கிரிகைகளிலும் கலந்து ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த உள்ளங்களுக்கும் அந்தியேட்டி அழைப்பிதழை அச்சிட்டு தந்துதவியவர் களுக்கும் இம்மலரை சிறப்பாக அச்சிட்டு வெளியிட உதவிய அனைவருக்கும் இன்னும் பலவழிகளிலும் உதவிய யாவருக்கும்

இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.



குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி

சிங்கராஜா+தெய்வானைப்பிள்ளை

- அமரர்.ஆறுமுகதாஸ்
- பரமேஸ்வரி
- அமரர்.முருகையா
- அமரர்.கோணலிங்கம்.
- ஈஸ்வரி

இராமலிங்கம்+இலட்சுமிப்பிள்ளை

- ஞானம்மா
- ஞானரத்தினம்
- ஞானலிங்கம்
- அமரர்.தங்கமணி
- ஞானேஸ்வரி
- சிவசோதி

சிவஈஸ்வரராஜா+மலர்மகள்

- சன்ஜி
- ஜனகன்

சிவனேஸ்வரன்+சந்திரகலா

- கஜடக்சன்
- சேஷயன்

பிரதீஸ்வரன்+திவியா

- பிறித்திகா
- விஜுஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய் எதற்காக அழுகிறாய்
எதை கொண்டுவந்தாய் அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை நீ கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாராம்சமுமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org